www.Padasalai.Net www.TrbTnpsc.com

# முதல் இடைப்பருவத்தேர்வு 2019-20

**பத்தாம் வகுப்பு** **சமூக அறிவியல்** **மதிப்பெண் : 100**

**I. சரியான விடையைத் தேர்வு செய்யவும் :** **12 X 1 = 12**

1. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிவடையுந்தருவாயில் கிழக்கு ஆசியாவில் உதயமான வலிமை வாய்ந்த நாடு எது? அ) சீனா ஆ) ஜப்பான் இ) கொரியா ஈ) மங்கோலியா

2. பெரு நாட்டை யார் தங்களுடைய பகுதிகளில் ஒன்றாக ஆக்கிக்கொண்டனர்?
அ) ஆங்கிலேயர் ஆ) ஸ்பானியர் இ) ரஷ்யர் ஈ) பிரெஞ்சுக்காரர்

3. ஹிட்லர் எவரைமிகவும் கொடுமைப்படுத்தினார்?
அ) ரஷ்யர்கள் ஆ) அரேபியர்கள் இ) துருக்கியர்கள் ஈ) யூதர்கள்

4. தக்காணபீடபூமியின் பரப்பளவு ......................... சதுர கி.மீ ஆகும்.
அ) 6 லட்சம் ஆ) 8 லட்சம் இ) 5 லட்சம் ஈ) 7 லட்சம்

5. பழைய வண்டல் படிவுகளால் உருவான சமவெளி ............................
அ) பாபர் அ) தராய் இ) பாங்கர் ஈ) காதர்

**6.** பொருந்தாத விடையைத் தேர்வு செய்க. இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணிகள்
அ) அட்சபரவல் ஆ) உயரம் இ) கடலிலிருந்து அமைந்துள்ள தூரம் ஈ) மண்

**7.**ஒரு வெளிநாட்டவர் கீழ்க்காணும் எதன் மூலம் இந்திய குடியுரிமை பெறமுடியும்?
அ) வம்சாவளி ஆ) பதிவு இ) இயல்புரிமை ஈ) மேற்கண்ட அனைத்தும்.

**8.** இந்திய அரசியலமைப்பின் எந்தபிரிவில் அரசியலமைப்பு திருத்தும் நடைமுறை குறித்து தரப்பட்டுள்ளது?
அ) சட்டப்பிரிவு 352 ஆ) சட்டப்பிரிவு 356 இ) சட்டப்பிரிவு 360 ஈ) சட்டப்பிரிவு 368

9. உச்சநீதிமன்றதலைமை நீதிபதி மற்றும் மற்றநீதிபதிகளைநியமிப்பவர்.
(அ) குடியரசுத் தலைவர் (ஆ) இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர்
(இ) ஆளுநர் (ஈ) பிரதமஅமைச்சர்

10. GDP யில் எந்ததுறைமூலம் அதிகமானவேலைவாய்ப்பு ஏற்படுகிறது?.
அ) வேளாண்துறை ஆ) தொழில்துறை இ) பணிகள் துறை ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

11. இந்திய பொருளாதாரம் என்பது
அ) வளர்ந்து வரும் பொருளாதாரம் ஆ) தோன்றும் பொருளாதாரம்
இ) இணை பொருளாதாரம் ஈ) அனைத்தும் சரி

12. இந்தியாவில் பிறப்பின் போது எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் ________ ஆண்டுகள் ஆகும்.
அ) 65 ஆ) 60 இ) 70 ஈ) 55

**II கோடிட்டஇடங்களை நிரப்புக :** **10 X 1 = 10**

**1.** பாரிஸ் அமைதி மாநாட்டில் பிரதிநிதியாகப் பங்கேற்ற பிரான்ஸின் பிரதமர் ............ ஆவார்.
2. நாசிச ஜெர்மனியின் ரகசியக் காவல்படை ...................................... என அழைக்கப்பட்டது.
3. .................... என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி.
4. ஒரேஅளவு மழைபெறும் இடங்களைஇணைக்கும் கோடு .............................. ஆகும்.
**5.** அரசியல் நிர்ணய சபையின் தற்காலிகதலைவராகதேர்ந்தெடுக்கப்பட்டார்
**6.** இந்திய குடிமக்களுக்கு அடிப்படைகடமைகள் ............................ பிரிவின் கீழ்வழங்கப்பட்டுள்ளன.
7. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ...................................... ஆகும்.
8. ............................... அலுவல் வழியில் மாநிலங்களவையின் தலைவர்ஆவார்
9.இந்தியா பொருளாதாரத்தின் வளர்ச்சி இயந்திரம் ________ துறையாகும்.
10. GDP ________ பொருளாதாரத்தின் ஒரு குறியீடாகும்.

**III. சரியான கூற்றைத்தேர்வுசெய்யவும் :** **4 X 1 = 4**

1. i) முதல் உலகப்போர் வெடித்த போது இத்தாலி நடுநிலைமை வகிக்கும் நாடாக இருந்தது.
ii) வெர்செய்ல்ஸ் அமைதி உடன்படிக்கையில் இத்தாலி பெரும் ஏமாற்றமடைந்தது.
iii) செவ்ரஸ் உடன்படிக்கை இத்தாலியுடன் கையெழுத்திடப்பட்டது.
iv) சிறிய இடங்களான ட்ரைஸ்டி, இஸ்திரியா, தெற்கு டைரோல் போன்றவைகூட இத்தாலிக்கு மறுக்கப்பட்டது.
அ) i), ii) ஆகியன சரி ஆ) **iii)** சரி இ) **iv)** சரி ஈ) **i), iii), iv)** ஆகியன சரி

2. **கூற்று:** (A) இமய மலையானது ஒரு காலநிலை அரணாகச் செயல்படுகிறது.
**காரணம்:** (R) இமயமலை மத்திய ஆசியாவிலிருந்து வீசும் குளிர்க்காற்றை தடுத்து இந்தியத் துணைக்கண்டத்தை மித வெப்பமாக வைத்திருக்கிறது.
அ) A மற்றும் R இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் சரி.
ஆ) A மற்றும் R இரண்டும் சரி, கூற்றுக்கான காரணம் தவறு.
இ) கூற்று சரி காரணம் தவறு. ஈ) கூற்று தவறு காரணம் சரி.

3. (i) உச்சநீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மற்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது 62.

(ii) மத்திய அரசின் மூன்றாவது அங்கம் நீதிதுறை ஆகும்.
(iii) அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகள் உச்சநீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அதிகாரங்களுக்கு உட்பட்டது.
(iv) உச்சநீதிமன்றம் பிறப்பிக்கும் ஆணை இந்தியாவின் அனைத்துப் பகுதியிலுள்ள நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும்.
(அ) ii & iv சரியானவை ஆ) iii & iv சரியானவை
இ) I & iv சரியானவை ஈ) i & ii சரியானவை

4. பின்வரும் காரணங்களினால் இந்தியாவின் சேமிப்பு விகிதம் குறைவாகஉள்ளது.
i. குறைந்த தனிநபர் வருமானம்
ii. மோசமான செயல்திறன் மற்றும் பொதுத்துறையின் குறைவான பங்களிப்பு
iii. வீடுகள் துறையின் மோசமான பங்களிப்பு
iv. கிராமப்புறத் துறையின் சேமிப்பு திறனை முழுமையாக பயன்படுத்தாதது.
அ) I, II, மற்றும் IV சரியானவை
ஆ) I, II மற்றும் III சரியானவை
இ) I, II, III மற்றும் IV சரியானவை
ஈ) I, III, மற்றும் IV சரியானவை

**IV. பொருத்துக : 12 X 1 = 12**

**அ.**
1) கமால் பாட்சா - சென்னை
2) எம்டன் - மின்னல் வேகத் தாக்குதல்
3) மூன்றாம் ரெய்க் - துருக்கி
4) பிளிட்ஸ்கிரிக் - ஹிட்லர்

**ஆ.**
1. சோழ மண்டலக்கடற்கரை - கங்கைஆற்றின் துணை ஆறு
2. யமுனை - இமயமலைகள்
3. வடகிழக்குப் பருவக்காற்று - தென்கிழக்கு கடற்கரைச்சமவெளி
4. உயிர்பன்மைச் சிறப்பு பகுதிகள் - அக்டோபர், டிசம்பர்

**இ.**
1. சட்டப்பிரிவு 356 - 42-வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்
2. சிறிய அரசியலமைப்பு - மாநிலநெருக்கடிநிலை
3. GST - நாட்டு வருமானம் / மக்கள்தொகை
4. தனிநபர் வருமானம் - பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி

**V. தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அனைத்துக் கேள்விகளுக்கும் விடையளிக்கவும் :**
**( ஏதேனும் 2 மட்டும்) 2 X 4 = 8**

**1. ஜெர்மன் பேரரசர்**
அ) ஜெர்மன் பேரரசர் இரண்டாம் கெய்சர் வில்லியமின் இயல்பு யாது?
ஆ) ஜெர்மனின் வன்முறைசார் தேசியம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
இ) மொராக்கோ விவகாரத்தில் கெய்சர் வில்லியம் தலையிட்டதேன்?
ஈ) ஜெர்மனியின் ஆப்பிரிக்கக் காலனிகளுக்கு என்ன நேர்ந்தது?

**2. தென்அமெரிக்கஅரசியல் நிகழ்வுப் போக்குகள்**
அ) ஒட்டு மொத்ததென்அமெரிக்காவும் எந்தஆண்டில் ஐரோப்பிய மேலாதிக்கத்திலிருந்து விடுதலைபெற்றது?
ஆ) மத்திய அமெரிக்காவில் எத்தனைக் குடியரசுகள் உருவாயின?
இ) எந்தஆண்டில் கியூபாஅமெரிக்காவால் கைப்பற்றப்பட்டது?
ஈ) தென்அமெரிக்காவில் குழுக்களின்ஆட்சிகள் பலராலும் விரும்பப்படாமைக்குக் காரணம் என்ன?

**3. பால்கன் போர்கள்**
அ) பால்கன் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது?
ஆ) முதல் பால்கன் போரின் விளைவுகள் யாவை?
இ) இப்போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் யாவர்?
ஈ) இரண்டாவது பால்கன் போரின் இறுதியில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் பெயரென்ன?

**4. பொதுச்சபையும் பாதுகாப்புக் கவுன்சிலும்**
அ) பாதுகாப்புக் கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர் நாடுகளைபட்டியலிடுக.
ஆ) பேரழிவு என்றால் என்ன?
இ) ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமை ஆணையத்தின் தலைவர் யார்?
ஈ) மறுப்பாணைஅதிகாரம் (தடுப்பாணை) என்றால் என்ன?

**VI. காரணம் கூறுக. 2 X 2 = 4**
1. வட இந்திய ஆறுகள் வற்றாத ஆறுகள்
2. மலைப்பகுதிகள் சமவெளியை விட குளிரானவை

**VII. சுருக்கமாக விடையளிக்கவும் : 6 X 2 = 12**

**வரலாறு ( ஏதேனும் 2 மட்டும்)**
1. பதுங்குக் குழிப்போர் முறை குறித்து நீங்கள் அறிந்ததென்ன?

2. ஒட்டாவா பொருளாதார உச்சி மாநாட்டின் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கவும்.
3. முதல் உலகப்போருக்குப் பிந்தைய உலகத்தின் மூன்று முக்கிய சர்வாதிகாரிகள் யாவர்?

**புவியியல் : ( ஏதேனும் 2 மட்டும்)**

1. இந்தியாவின் அண்டைநாடுகளின் பெயர்களைக்கூறுக.
2. தக்காண பீடபூமி - குறிப்பு வரைக.
3. இந்தியாவில் உள்ள **உயிர்க்கோள பெட்டககங்கள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.**

**குடிமையியல் : ( ஏதேனும் 1 மட்டும்)**

**1.** இந்தியாவின் செம்மொழிகள் எவை?
2. நிதி **மசோதா** என்றால் என்ன?

**பொருளியியல் : ( ஏதேனும் 1 மட்டும்)**

1. நாட்டு வருமானம் - வரையறு
2. இந்திய பொருளாதாரத்தை மேம்படுத்த உதவும் காரணிகள் யாவை?

**VIII. வேறுபடுத்துக.** **2 X 2 = 4**

1. இமாத்ரி மற்றும் இமாச்சல்
2. வானிலை மற்றும் காலநிலை
3. அயனமண்டல பசுமைமாறாக் காடுகள் - இலையுதிர்க் காடுகள்

**IX. பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடையளிக்கவும் :** **4 X 5 = 20**

1. அ) **பன்னாட்டு சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக. அதன் தோல்விக்கான காரணங்களை குறிப்பிடுக.**
**(அல்லது)**
ஆ. ஜெர்மனியில் ஹிட்லரின்எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கண்டறியவும்.

2. அ) இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி. (**அல்லது)**
ஆ). இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்

**3. அ)** அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை பற்றி எழுதுக (**அல்லது)**
ஆ). நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் குறித்து திறனாய்வு செய்க

4. அ) நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி?. **(அல்லது)** ஆ). GDP ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி?.

**X. உலக வரைபடத்தில் பின்வரும் நாடுகளை குறிக்கவும் :** **5 X 1 = 5**

1.கிரேட் பிரிட்டன் 2.ஜெர்மனி 3. ஹிரோஷிமா 4. துருக்கி 5. செர்பியா

**XI. கொடுக்கப்பட்டுள்ள இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்.** **5 X 1 = 5**

மேற்கு தொடர்ச்சி மலை, பிரம்மபுத்ரா, தக்காணபீடபூமி.
வடகிழக்கு பருவக்காற்று வீசும்திசை, அகத்தியர் மலை உயிர்க்கோள பெட்டகம்,

**XII.** 1920 முதல் 1940 வரையிலான உலக வரலாற்று நிகழ்வுகளை

நான்கினை காலக்கோட்டில் குறிக்கவும் **4 X 1 = 4**

***சி.மகேந்திரன்*** பட்டதாரி ஆசிரியர்
அ.உ.இ.நி.பள்ளி - பரிகம், தர்மபுரி மாவட்டம்.